www.XtremePapers.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/02**

Paper 2 Reading and Writing **October/November 2013**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*7984731267*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண்
உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம், ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **6** printed pages and **2** blank pages.

## பகுதி – 1

முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

### அதிரடி விளையாட்டுகள்

விளையாட்டுகள் பலவிதம். அரங்கத்திற்குள் விளையாடும் ஆட்டம், மைதானத்தில் மட்டும் ஆடும் ஆட்டம், வீட்டுக்குள் ஆடும் ஆட்டங்கள் கேரம், செஸ், தாயக்கட்டம் என பலவகைப்படும். இவையெல்லாம் பல நூற்றாண்டுகளாக இருக்கின்றன. சமீப காலத்தில் பல புதிய விளையாட்டுகள் ஆடப்படுகின்றன. இவைகளை விளையாட்டுகள் என்று சொல்வதை விட துணிகரச் செயல்கள் என்றே சொல்ல வேண்டும். இவைகளை ஆடுவோருக்கு இன்ஸ்யூரன்ஸ் கிடைப்பது கூட கடினம். தமிழர்களின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டையும் இந்த வகையில் சேர்க்கலாம்.

மலை உச்சியிலிருந்து கயிற்றைக் கட்டிக்கொண்டு கீழே குதித்தல், மலை ஏறுதல்,விமானத்திலிருந்து குதித்தல், க்ளைடரில் ஏறி காற்றில் மிதத்தல், பனிக்கட்டியில் சறுக்குதல், கடலில் வரும் மாபெரும் அலைகளில் சவாரி செய்தல், சூடான காற்றடைத்த பலூன்களில் உயரே செல்லுதல் என்று அதிரடி விளையாட்டுகளின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவைகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும் இளைஞர்கள்தான். இளைஞர்கள் இவைகளை நாடிச் செல்வதன் காரணம் என்ன? குழு விளையாட்டுகளில் தனிப்பட்ட திறமையைக் காட்ட முடியாது. இங்கே காட்டலாம். எல்லோருக்கும் முன்பாக சாதனை செய்து பெயர் வாங்குவதும், சவால்களை எதிர்கொண்டு அழைப்பதும் இளைஞர்களுக்கு மிகவும் பிடித்தவை.

முதல் முதலாக உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த பெண் ஜப்பான் நாட்டவர். அவர் பெயர் ஜங்கோ டாபே. அவருக்கு கல்யாணமாகி இரண்டு குழந்தைகளும் உண்டு. ஏன் இந்த மாதிரியான அபாயகரமான செயல்களில் ஈடுபட்டீர்கள் என்று அவரிடம் பத்திரிக்கை நிருபர்கள் கேட்டனர். நான் பத்து வயதிலிருந்தே மலைகளில் ஏறத் துவங்கினேன், பின்னர் பெண்களுக்கான மலை ஏறும் சங்கம் வைத்தேன். பல சிகரங்களை வென்றவுடன் எவரெஸ்டையும் வெற்றிகொள்ள எண்ணினேன் என்றார். உங்களை மலை ஏறும் குடும்பப் பெண் அல்லது எவரஸ்ட் அம்மா என்று அழைக்கலாமா? என்று அவர்கள் கேட்டபோது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார், “ஏன் என்னை மலைகளின் சுதந்திரப் பறவை என்று சொல்லலாமே.”

விமானத்தில் ஏறி 12000 அடி உயரத்திலிருந்து கீழே குதித்த பெண் உத்தரா மனோகர் என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்: “பாராசூட் பயிற்சியெல்லாம் முடிந்தது. அந்த நாளும் வந்தது. இப்போது செயலில் காட்டவேண்டும். என் பயிற்சியாளர் டேவ் எனக்கு உடுப்புகளை மாட்டிவிட்டார். எல்லாவற்றையும் சரிபார்த்தேன். விமானம் பறக்கும் உயரம் 12000 அடி. வயிறு ஒரு கலக்கு கலக்கியது. ‘ஒருவேளை முதல் உடுப்பு விரியாவிட்டால்------’ என்று பயிற்சியாளர் சொன்னவுடன் இதயம் படபடவென அடித்தது. எல்லா பயிற்சிகளையும் மனதில் வேகமாக ஒருமுறை சொல்லிப் பார்த்தேன். டேவ் சொன்னார் ‘உடனே குதி. ஒரு வினாடியும் தாமதியாதே.’ அவ்வளவுதான் இப்போது என் இதயத்துடிப்பை என்னால் கேட்க முடிந்தது. அவர் சொன்னபடி குதித்தேன். பாராசூட்டும் விரிந்தது. ஆஹா, என்ன ஆனந்தம். தங்கு தடையற்ற நீல வானில் மிதந்தேன். ஒரு புறம் பயம், ஒரு புறம் மகிழ்ச்சி. பாரசூட் தரையைத் தொட்டவுடன் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை.”

இதுதான் அட்ரினலின் வேகம் என்பது. நமது உடல் ஒரு ஆபத்தை சந்திக்கவிருக்கையில் அதை சமாளிக்க மூளை உத்தரவிடுகிறது. உடனே அட்ரினலின் சுரப்பி வழக்கத்தை விட கூடுதலாக அட்ரினலின் என்னும் ஹார்மோனை சுரக்கிறது. இதில் ஈடுபடுவோர் உற்சாகத்தில் கூச்சலிடுவார்கள். பலருக்கு அட்ரினலின் சுரப்பி வேகமாக வேலை செய்வது பிடிக்கிறது. அதாவது ஒரு சவாலை ஏற்கையில் வரும் பீதியும் பதட்டமும் அவர்களுக்கு இன்பம் தருகிறது. எப்போது? காரியத்தில் வெற்றிபெற்ற பின்னர்தான்.

அதிரடி விளையாட்டுகள் ஆபத்தானவை. போதுமான பயிற்சியும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இருக்கவேண்டும். உலகில் இப்போது இவை பரவி வருகின்றன. இதன் அடிப்படையில் சுற்றுலாவும் நடைபெறுகிறது. நாம் விளையாடுகிறோமோ இல்லையோ டெலிவிசனில் இவைகளைப் பார்க்கும்போது நமக்கும் உற்சாகம் பிறக்கத்தான் செய்கிறது.

**1** கீழே கொடுத்துள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அல்லது சொற்றொடரை மேலேயுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: புகை வண்டி ஓடும் பாதை – தண்டவாளம்

**(a)** விளையாட்டுத் திடல் [1]
**(b)** சதுரங்கம் [1]
**(c)** மாடு பிடித்தல் [1]
**(d)** திருமணம் [1]
**(e)** செயலில் வெற்றி [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**2** கீழே தரப்பெற்றுள்ள சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக்கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: அன்பு

விடை – குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்.

**(a)** நூற்றாண்டு [1]
**(b)** இளைஞர்கள் [1]
**(c)** குடும்பப் பெண் [1]
**(d)** உற்சாகம் [1]
**(e)** அதிரடி [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**3** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** தமிழர்களின் வீர விளையாட்டு எது? [1]

**(b)** இளைஞர்கள் அதிரடி விளையாட்டுகளை விரும்புவது ஏன்? [3]

**(c)** ஜப்பானிய பெண் எவரஸ்ட் சிகரம் சென்றது ஏன்? [3]

**(d)** விமானத்திலிருந்து குதித்த உத்தராவுக்கு என்ன அனுபவம் கிடைத்தது? [4]

**(e)** அட்ரினலின் வேகம் குறித்து நீங்கள் அறிவது என்ன? [4]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

© UCLES 2013

**BLANK PAGE**

**TURN OVER FOR SECTION 2.**

# பகுதி – 2

## வீட்டுக்குள் ஆடும் விளையாட்டுகள்

அண்மைக் காலமாக மாணவர்களின் நேரத்தை வீணடிக்கும் கம்ப்யூட்டர் விளையாட்டுகள் வந்துள்ளன. இதில் சில ஆட்டங்கள் வன்முறையைப் போற்றுகின்றன. இதுவும் நேரத்தை அதிகம் செலவிடுவதும் பெற்றோர்களை கவலைப் பட வைக்கின்றன.

சதுரங்கம், ஆடு புலி ஆட்டம், தாயக்கட்டம், பல்லாங்குழி, சீட்டுக் கட்டு, கேரம்போர்ட் போன்ற பழையகால விளையாட்டுகளோடு, பல புதிய போர்ட் விளையாட்டுகள் ஆண்டுதோறும் சேர்ந்து கொண்டு இருக்கின்றன. சதுரங்கம் எனப்படும் செஸ் இந்தியாவில் தோன்றியது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் இதை ஆடி வருகிறோம். இவைகளை இரண்டு முதல் நான்கு பேர் மட்டுமே விளையாடலாம். வீட்டுக்குள் ஆடுவதால் பாதுகாப்பு அதிகம். இதனால் தாய்மார்களுக்கு நிம்மதி. இத்தகைய ஆட்டங்கள் நினைவாற்றலை வளர்க்கும். குடும்ப உறுப்பினர்களும் வயது வித்தியாசமின்றி பங்கேற்கலாம். எந்த நேரத்திலும் விளையாடலாம். பெரும்பாலும் அமைதியாக விளையாடலாம். ஆனால் திடலில் விளையாடும்போது கிடைக்கும் உடற்பயிற்சி இந்த ஆட்டங்களில் கிடைக்காது. இங்கு மூளைக்குத் தான் அதிக வேலை. திடலில் ஆடினால் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. வீட்டில் அது இல்லை.

உலக செஸ் போட்டியில் முதலாக வந்த விஸ்வநாதன் ஆனந்த் செஸ் ஆட்டம் பற்றி என்ன கூறுகிறார் தெரியுமா? “செஸ் ஆட நிறைய கவனம் தேவை. மனம் சிதறாமல் ஒரே இடத்தில் நினைவு இருக்கவேண்டும். ஒரு சிறிய தவறும் பெரிய தோல்வியைக் கொடுத்துவிடும். இதற்காக நான் தினமும் உடற்பயிற்சி சாலைக்குப் போவேன். மேலும் முக்கியமாக கடைசி ஆட்டங்கள் ஆடுகையில் நிறைய சக்தியும் தேவை.”

கம்ப்யூட்டர்களில் செஸ் வந்து விட்டதால் இயந்திரங்கள் மனிதனை விட வேகமாக கணக்குப் போட்டுவிடுமே. இனி மனிதனுக்கு என்ன வேலை? என்று ஒரு நிருபர் கேட்டார். “நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன்.ஆனால் அது சரியில்லை. கம்ப்யூட்டர்களால் புதிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன. இப்பொழுது எங்களுடைய விளையாட்டுகளை நாங்களே ஆராயவும் கம்ப்யூட்டர் உதவுகிறது என்றார் ஆனந்த்.”

வீட்டு விளையாட்டுகளுக்கு செலவும் மிகவும் குறைவு. சில ஆட்டங்களுக்கு மரங்களின் விதைகளே போதுமானது. பல்லாங்குழி என்ற விளையாட்டை பாட்டி முதல் சிறுவர் வரை எல்லோரும் விளையாடலாம். இது இந்தோநேசியா, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் கூட இருப்பது வியப்பாக இருக்கிறது. எதியோப்பியாவில் ஆதிகாலத்தில் இதை ஆட கல்லில் போட்ட குழிகளை இப்போதும் காணலாம். ஆதி மனிதன் செலவில்லாமல் கற்களையும் விதைகளையும் கொண்டு ஆடிய ஆட்டம் இது. இப்போது மரத்தில் குழிகளை வெட்டி பல்லாங்குழிகளை செய்கின்றனர். இது மனிதர்கள் முதல் முதலில் கணக்குப் பாடம் கற்க உதவிய ஆட்டம்.

பல ‘போர்ட்’ ஆட்டங்கள் பொது அறிவை வளர்க்கும் விதத்தில் இப்போது அமைக்கப்பட்டுள்ளன. வெளியே மழை பெய்தாலும் பனி கொட்டினாலும் வீட்டில் இவைகளை ஆடிப் பொழுதைப் போக்கமுடிகிறது. கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைக் காலங்களில் இது உதவுகிறது. இந்துக்கள் சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி காலங்களில் இரவு முழுவதும் கண் விழித்திருக்க சொர்க்கப்படம், தாயக் கட்டம் ஆடுகிறார்கள். மொத்தத்தில் வெளியே ஆடுவதிலும், வீட்டுக்குள்ளே ஆடுவதிலும் சாதக பாதகங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

© UCLES 2013

4 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

(a) கம்ப்யூட்டர் விளையாட்டுகள் தாய்மார்களுக்கு ஏன் கவலை தருகிறது? [2]

(b) வீட்டு விளையாட்டுகளில் என்ன நன்மைகள் இருக்கின்றன? [4]

(c) செஸ் ஆடுவதற்கு என்ன குணங்கள் அவசியம் என்று ஆனந்த் கருதுகிறார்? [3]

(d) கம்யூட்டரினால் செஸ் விளையாட்டில் ஏற்பட்ட தாக்கம் பற்றி ஆனந்த் கருத்து என்ன? [2]

(e) பல்லாங்குழி போன்ற விளையாட்டுகள் மனித இனத்துக்குக் கொடுத்த இரண்டு நன்மைகள் என்ன? [2]

(f) மதங்கள் உள்பட பல துறைகளில் போர்ட் ஆட்டங்கள் எப்படி உதவி செய்கின்றன? [2]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

5 பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

(a) வீட்டுக்குள் ஆடும் ஆட்டங்களிலும் அதிரடி ஆட்டங்களிலும் உள்ள நன்மைகளை இரண்டு பகுதிகளில் இருந்தும் தொகுத்து எழுதவும். [10]

(b) உங்களுக்கு என்ன விளையாட்டு பிடிக்கும்? ஏன்? [5]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

© UCLES 2013

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.